Copy of Deposition

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி**

**அசல் வழக்கு எண் :02/2018**

**வாதிதரப்பு சாட்சி:1**

பெயர்:சந்திரசேகர் (வா.சா.1 ) நாள்:02.01.2024

த.பெ:

**2024 ம்** ஆண்டு **ஜனவரி மாதம் 2 ம் நாள் செவ்வாய்கிழமை** வாதி மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் உத்தரவின்பேரில் ம.பெரியசாமி அவர்களால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்பட்டது.

**வா.சா:-1 – குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பு):-**

வழக்கு சொத்து கொந்தளம் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் என்ன பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்றால் தாவா சொத்திற்குள் நான் சென்று வருவதை பிரதிவாதிகள் தடுக்கக்கூடாது என்று கோரி தாவா தாக்கல் செய்துள்ளேன். தடபாத்தியம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, ஏற்கனவே உள்ள தடத்தில் சென்று வருவதை பிரதிவாதிகள் தடுக்கக்கூடாது என்று தாவா தாக்கல் செய்துள்ளேன்.

தாவா சொத்து நான் கிரையம் பெற்ற வகையில் எனக்கு பாத்தியம் ஆகும். தாவா சொத்தின் சர்வே எண் தற்போது எனக்கு சரியாக ஞாபகம் இல்லை.

2. நான் தாவா சொத்தை தனலட்சுமி என்பவரிடம் இருந்து 02.01.2008 ம் தேதி அன்று கிரையம் பெற்றேன். தாவா சொத்தின் மூல ஆவணங்களை கிரையம் பெறும்போது பார்வையிட்டேனா என்றால் தாவா சொத்து குறித்து பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்திருந்தார்கள் அதனை பார்வையிட்டேன். தாவா சொத்திற்குண்டான வில்லங்க சான்றிதழை பார்வையிட்டேனா என்றால் இல்லை. நான் ஜனவரி மாதத்தில் கிரையம் பெற்ற பிறகு வங்கியில் கடன் பெற சென்றபோது ஆவணத்தில் பிழை இருப்பதாக சொன்னதன் பேரில் தனலட்சுமியிடம் கூறினேன், அதற்கு அவர் மே மாதத்தில் எனக்கு தாவா சொத்தில் சர்வே எண் தவறாக குறிப்பிடப்பட்டிருந்ததை பொறுத்து பிழை திருத்தல் பத்திரம் எழுதி கொடுத்துவிட்டார்.

3. தாவா சொத்திற்கு மேபுறம் மற்றும் வடபுறம் எனக்கு தாவா சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பே சொத்து உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு ஏற்கனவே இருந்த சொத்துக்கள் மற்றும் தாவா சொத்தை கிரையம் பெற்ற உடன் அதனையும் சேர்த்து

ரைஸ்மில் கட்டப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வடபுறமாக உள்ள சொத்தை இருவரிடம் இருந்து கிரையம் வாங்கியுள்ளேன். தென்வடல் தார் ரோட்டில் இருந்து எனது ரைஸ்மில்லுக்கு வர இரு தடங்கள் உள்ளன என்றால் சரிதான். அவ்வாறான இரு தடங்கள் வழியாகத்தான் கனரக வாகனங்கள் சென்று வருகின்றன என்றால் சரிதான்.

4. தாவா சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பே அதனை ஒட்டி மூவரிடம் கிரையம் பெற்று அந்த சொத்தை அனுபவித்து வந்தேன் என்றால் சரிதான். கிரையம் வாங்குவதற்கு முன்பு தாவா சொத்தின் விஸ்தீரணம் மற்றும் பாகபிரிவினை ஏதேனும் ஆகியுள்ளதா என்று தெரிந்து கொண்டேனா என்றால் தாவா சொத்தை அளந்து பார்த்துதான் வாங்கினேன், தாவா சொத்துடன் மற்ற சொத்துக்களை தங்கவேல் என்பவர் மூன்று நபர்களுக்கு ஒரு பொது அதிகார பத்திரம் வாயிலாக விற்பனை செய்திருந்தார், அந்த மூவரிடமும் நான் சொத்துக்களை கிரையம் வாங்கியுள்ளேன், ஏற்கனவே தங்கவேலு கிரையம் கொடுத்தவர்களிடம்தான் நான் கிரையம் வாங்குவதால் வில்லங்கம் ஏதும் இருக்காது என்று வாங்கினேன். தங்கவேலு என்பவர் மூன்று நபர்களுக்கு கிரையம் கொடுக்கவில்லை உண்மையில் 1ம் பிரதிவாதி மற்றும் தனலட்சுமியின் கணவர் தங்கராஜ்

ஆகியோருக்குதான் கிரையம் கொடுத்தார் என்றால் சரியல்ல, இராமசாமி, தங்கராஜ், சுசீலா, பாப்பாத்தி ஆகியோருக்கு தங்கவேலு கிரையம் கொடுத்திருந்தார்.

5. தங்கவேலிடம் கிரையம் பெற்ற நபர்களுக்குள் எனக்கு கிரையம் கொடுப்பதற்கு முன்பு அவர்கள் பாகபிரிவினை செய்து கொண்டார்களா என்றால் இல்லை. இந்த வழக்கு 03.03.2018 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 03.01.2018 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் கிரையம் பெற்ற பிறகு தாவா சொத்தை பாகபிரிவினை செய்து கொள்ள முயற்சி ஏதேனும் எடுத்தேனா என்றால் இல்லை, ஏற்கனவே தாவா சொத்து தனியாகத்தான் இருந்தது. எனக்கு தாவா சொத்தை கிரையம் கொடுத்த தனலட்சுமிக்கு 1 ம் பிரதிவாதி இராமசாமியும், தனலட்சுமியின் கணவர் தங்கராஜ் ஆகியோர்கள் தான் தங்களது சொத்துக்களை பொறுத்து பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்திருந்தார்கள் என்றால் சரிதான். 18.05.2001 ம் தேதி அன்று கொந்தளம் கிராமத்தில் ரீ.சர்வே எண்.387/2 ல் இச்சிப்பாளையம் கிராமம், கருத்திபாளையம் ஊரில் குடியிருக்கும் பாவாயி அம்மாளின் வகையறாவிடமிருந்து பொது அதிகார பத்திரம் வாயிலாக பொது அதிகார முகவரான தங்கவேல் என்பவரிடம் 73 சென்ட் நிலத்தை 1 ம் பிரதிவாதியும், தனலட்சுமியின் கணவர்

தங்கராஜ் ஆகியோர்கள் கிரையம் பெற்றார்கள் என்றால் சரிதான்.

6. மேற்படி ரீ. சர்வே எண்.387/2 ல் 1.91 ஏக்கர் பூமி இருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 23.11.2007 ம் தேதி அன்று தங்கராஜ் மனைவி தனலட்சுமி என்பவருக்கு ரீ. சர்வே எண்.387/2 ல் இருந்து பொதுவில் 37 சென்ட் நிலத்தை தங்கராஜ் என்பவரும் இராமசாமியும் பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் சரிதான், ஆனால் மேற்படி 37 சென்ட் நிலம் இனம் கண்டுதான் கொடுக்கப்பட்டது. மேற்படி 37 சென்ட் நிலத்தில் 11340 சதுரடி நிலத்தை நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு கிரையம் கொடுப்பதற்கு முன்பே இருநபர்களுக்கு கிரையம் கொடுத்திருந்தார்கள் என்றால் சரியல்ல, எனக்கு பிறகுதான் கிரையம் கொடுத்தார்கள். எனக்கு கிரையம் கொடுக்கும்போது அளவீடு செய்து கல் போட்டுதான் கிரையம் கொடுத்தார்கள்.

7. நான் கிரையத்திற்கு பின்னிட்டு வாங்கிய சொத்தில் வேலி போட்டேனா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு தென்புறத்தில் 1 ம் பிரதிவாதியின் நிலம் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் எனக்கு எவ்வளவு பாத்தியம் என்பதை காட்ட நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து அளவீடு ஏதும் செய்யவில்லை என்றால் சரிதான்.

Copy of Deposition

பிரதிவாதிகள் தாவா சொத்தில் எவ்வளவு நீள அகலத்தில் ஆக்கிரமிப்பு செய்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். உண்மையில் எனக்கும், பிரதிவாதிகளுக்கும் எவ்வளவு சொத்து உள்ளது என்பதை தெரிந்து கொள்ள அளவீடு செய்தால்தான் தெரிய வரும் என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற சொத்தில் எவ்வளவு விஸ்தீரணத்தில் நான் சுவாதீனத்தில் உள்ளேன் என்பதை காட்ட ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பத்திரம் மட்டும் தாக்கல் செய்துள்ளேன்.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

Sd xxx (V.Loganathan)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.